மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) சென்னை நகருக்கு மாதம் ஒன்றுக்கு 10,500 மெட்ரிக் டன் சிமிண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) 15,000 மெட்ரிக் டன்கள்.

(உ) 160.

(எ) ஆம்.

(ஒ) அரசாங்கம் சிமிண்ட் விநியோகக் கட்டுப்பாடு உத்தரவு ஒன்றை இந்த ஆண்டு பிறப்பித்திருக்கிறது.

நில அபிவிருத்தி வரி விதிப்பு.

*17 வினா—**திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தற்போது எந்தெந்த அணைக்கட்டு பாசன நிலங்களுக்கு நில அபிவிருத்தி வரி வசூலிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விவரக் குறிப்பு@ ஒன்று பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த வரி எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது ? எத்தனை காலம் வசூலிக்கப்படும்? தொடர்ந்து வசூலிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1955 ஆம் ஆண்டு பாசன மேம்பாட்டு கட்டண விதிப்புச் சட்டத்தின் கீழும், ஒன்றரை லட்சத்திற்கு மேல் செலவானதும், 1—1—1947 லிருந்து நிறைவேற்றப்பட்டதும் மாவட்ட அரசிதழில் மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கப்பட்ட பாசன அல்லது வடிகால் பணிகளுக்கு இது பொருந்துகிறது. ஏக்கர் ஒன்றுக்குச் செலுத்தத் தக்க மேம்பாட்டுக் கட்டணவீதம் 'புதிய ஆயக்கட்டு' நேர்வில் ரூ. 80 லிருந்து ரூ. 200 வரையில் இருக்கும், 'மேம்படுத்தப்பட்ட பழைய ஆயக்கட்டு' நேர்வில் ரூ. 50 என்பதற்குட்பட்டு வசூலிக்க படுகிறது.

@ 185-187 ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.